# யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி
## தகவல் தொடர்பாடல் தொழினுட்பம்
### முதலாம் தவணைப் பரீட்சை - 1
### தரம் - 10

பகுதி – I

**சரியான விடையின் கீழ்க்கோடிடுக.**

1. பின்வருவனவற்றில் தகவலின் பண்பாக கொள்ளமுடியாதது எது?
   1. செம்மை 2. பொருத்தம் 3. கூடிய கிரயம் 4. குறைய கிரயம்
2. தரப்பட்ட விடயங்களில் மின்னரசாங்கம் தொடர்பாக தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் நன்மை யாது?
   1. இலங்கைப் படம் 2. அரசாங்க சட்டம் 3. விசா வசதி 4. படிவங்கள்
3. கீழ்வரும் கருவிகளில் இதயத்துடிப்பை அவதானிக்கப் பயன்படுவது யாது?
   1. ECG 2. CAT 3. MRT 4. EEG
4. கணினிக்கான முதல் நிகழ்ச்சித்திட்டத்தை உருவாக்கியவர் யார்?
   1. பஸ்கால் 2. அடா 3. யோசப் ஜக்குவாட் 4. ஹொவார்ட் அயிக்கன்
5. தொழிலாளரின் வரவுப்பதிவினை பதிவு செய்வதற்கு பயன்படுத்தப்படும் கருவி எது?
   1. CCTV கமரா 2. அட்டை வாசிப்பு
   3. விரல் அடையாள அலகிடல் 4. Video Conferencing
6. Mark - 1 கணினியை வடிவமைத்தவர்களாகக் கொள்ளப்படுபவர் யார்?
   1. பஸ்கால் 2. ஹேர்மன் ஹோலோர்த் 3. யோசப் ஜக்குவாட் 4. ஹொவார்ட் அயிக்கன்
7. உடலின் உட்பகுதிகளை முப்பரிமான வடிவில் படம் எடுக்க உதவும் கருவி எது?
   1. ECG 2. CAT 3. MRI 4. EEG
8. பின்வருவனவற்றில் ஒரு தொகுதியின் கூறுகளைக் கொண்ட தொகுதி எது?
   1. உள்ளீடு, முறைவழி, வெளியீடு
   2. உள்ளீடு, தொகுதிச் செய்முறை, முறைவழி
   3. உள்ளீடு, தொகுதிச் செய்முறை, வெளியீடு
   4. வெளியீடு, தொகுதிச் செய்முறை, முறைவழி
9. நாசா போன்ற நிறுவனங்களில் பயன்படுத்தப்படும் கணினி வகை எது?
   1. மீக்கணினி 2. பெருகணினி 3. சிறுகணினி 4. தனிநபர் கணினி
10. நிதி நிறுவனங்களில் பயன்படுத்தப்படும் கணினி வகை எது?
    1. மீக்கணினி 2. பெருகணினி 3. சிறுகணினி 4. தனிநபர் கணினி
11. எண்ணக, ஒத்திசை சமிக்கைகளை ஒருங்கே பயன்படுத்தும் கருவி எது?
    1.ECG 2. CAT 3. MRI 4. EEG
12. பின்வருவனவற்றில் சுட்டும் சாதன வகைகளைத் தெரிவு செய்க.
    1. சுட்டி, வருடி, ஒளிப்பேனா 2. தொடுதிரை, இயக்கப்பிடி, ஒளிப்பேனா
    3. சுட்டி, வருடி, தொடுதிரை 4. வருடி, சுட்டி, இயக்கப்பிடி
13. தாக்க அழுத்த அச்சுப்பொறிக்கு உதாரணமாக கருதக்கூடியது எது?
    1. வரி அச்சுப்பொறி 2. வெப்ப அச்சுப்பொறி 3. லேசர் அச்சுப்பொறி 4. வரைவி



kalvi.lk

14. லேசர் அச்சுப்பொறியில் உள்ள பொதியுறையின் பெயர் என்ன?

1. றிபன் 2. மைப்பொடி 3. அச்சுப்பதிப்பி 4. மைத்தாரை

15. பின்வருவனவற்றுள் பெரியளவிலான அச்சுப்பிரதிகளை எடுக்கப் பயன்படும் பொறி எது?

1. வரி அச்சுப்பொறி 2. வெப்ப அச்சுப்பொறி 3. லேசர் அச்சுப்பொறி 4. வரைவி

16. அழிதகு நினைவகம் எனப்படுவது எது?

1. வாசிப்பு மட்டும் நினைவகம் 2. தற்போக்குப் பெறுவழி நினைவகம்
3. பதுக்கு நினைவகம் 4. மையமுறைவழி அலகு

17. மையமுறைவழி நினைவகம் என அழைக்கப்படுவது எது?

1. வாசிப்பு மட்டும் நினைவகம் 2. தற்போக்குப் பெறுவழி நினைவகம்
3. பதுக்கு நினைவகம் 4. மையமுறைவழி அலகு

18. காந்த தொழினுட்பத்தைப் பயன்படுத்தும் சாதனம் எது?

1. CD 2. நினைவக அட்டை 3. Blue Ray 4. காந்த நாடா

19. கணினி உலகில் பயன்படும் சாதாரண இறுவட்டின் கொள்ளளவு யாது?

1. 650 - 900 MB 2. 700 - 750 MB 3. 650 - 700 MB 4. 750 - 800 MB

20. இலக்கமுறை தொலைக்காட்சியினை இணைப்பதற்கு பயன்படுத்தப்படும் துறை யாதெனக் கருதுவீர்?

1. PS/2 2. HDMI 3. USB 4. RJ45

21. முழு இருவழிப்போக்கு முறைக்கு உதாரணமாகக் கொள்ளக்கூடியது பின்வருவனவற்றுள் எது?

1. வானொலி 2. பத்திரிகை 3. வேக்கி ரோக்கி 4. தொலைபேசி

22. பின்வரும் வழிப்படுத்தப்பட்ட ஊடகங்களில் இலாபகரமானதும் விரைவானதுமான ஊடகங்கள் முறையே.

1. முறுக்கிய கம்பிச்சோடி, ஒளியியல் நார்
2. முறுக்கிய கம்பிச்சோடி, ஓரச்சு வடம்
3. ஒளியியல் நார், ஓரச்சு வடம்
4. ஓரச்சு வடம், ஒளியியல் நார்

23. Wi-Fi க்குப் பயன்படுத்தப்படும் வழிப்படுத்தப்படாத ஊடகம் கருதக்கூடியது எது?

1. நுண்ணலை 2. வானொலி அலை 3. செங்கீழ்க் கதிர் 4. செய்மதி அலை

**24.** எண்ணக சமிக்கையை ஒப்புமையாகவும், ஒப்புமை சமிக்கையை எண்ணகமாகவும் மாற்றுவதற்கு பயன்படுத்தப்படும் கருவியாக அறியப்படுவது எது?

1. தீச்சுவர் 2. வழிப்படுத்தி 3. குவியம் 4. மொடம்

25. கணினியில் வன்பொருளாகவும், மென்பொருளாகவும் பயன்படுத்தக்கூடிய ஒரு சாதனம் எது?

1. தீச்சுவர் 2. வழிப்படுத்தி 3. குவியம் 4. மொடம்

26. வலையமைப்பிலுள்ள பிரதான கணினி ....................................... பெயர் கொண்டு அழைக்கப்படும்.

1. பயனர் கணினி 2. மீக் கணினி 3. சேவையகம் 4. சிறு கணினி

27. உடு வடிவ இடத்தியலில் உள்ள கணினிகளை ஒன்றுடன் ஒன்று இணைக்க பயன்படுத்தப்படும் கருவி எது?

1. ஆளி 2. Cable 3. LAN 4. மொடம்



kalvi.lk

28. தரப்பட்ட நிலைமைகளில் செங்கீழ்க்கதிரின் பயன்பாடு காணப்படக்கூடியது எது?

1. Wi-Fi 2. தொலைக்காட்சி 3. நாண் இல்லாத சுட்டி 4. செய்மதி

29. பின்வருவனவற்றில் 15 துளைகளினை கொண்ட துறை எது?

1. USB 2. தொடர் குதை 3. ஒளியுருக்குதை 4. RJ45

30. தன்னியக்க காசளிப்பு இயந்திரத்தில் அச்சீடு செய்வதற்கு பயன்படும் பொறி எது?

1. வெப்ப அச்சுப்பொறி 2. லேசர் அச்சுப்பொறி

3. வரைவி 4. வரி அச்சுப்பொறி

31. பதினறும எண்முறைமையில் உள்ளடங்கும் உறுப்புக்கள் எத்தனை?

1. 2 2. 8 3. 10 4. 16

32. $01_2+111_2$ ன் முடிவாக அமைவது?

1. $1100_2$ 2. $1000_2$ 3. $11_2$ 4. $1110_2$

33. எண்முறைமையின் மிகச்சிறிய அலகு எது எனத் தெரிக.

1. Bit 2. Byte 3. Word 4. Digit

34. தரப்பட்ட எண்ணில் மிக மதிப்புறு எண் மற்றும் குறைந்த மதிப்புறு எண்கள் முறையே குறிப்பிடுக. 01238.0

1. 1, 8 2. 1, 0 3. 0, 0 4. 0, 8

35. $2^{10}$ Kilo bytes இதன் மூலம் நீர் கருதிக்கொள்வது

1. 1 Giga byte 2. 1 bytes 3. 1 Mega byte 4. 1 Pera byte

36. பின்வரும் சாதனங்களில் தரவுப் பெறுவழிக்கதி கூடிய சேமிப்பு சாதனம் எது?

1. இறுவட்டு 2. காந்தநாடா 3. வன்வட்டு 4. பதிவேட்டு நினைவகம்

37. கணினியில் பயன்படும் குறிமுறை அல்லாததாக இனங்காணக்கூடியது?

1. ASCII 2. EBCDIC 3. BDC 4. Unicode

38. தமிழ் மற்றும் சிங்கள எழுத்துக்களிற்குப் பயன்படுத்தப்படும் குறிமுறை எது?

1. ASCII 2. EBCDIC 3. BDC 4. Unicode

39. ASCII குறிமுறை A ஆனது (65) இனைக் குறிக்கும் எனின் D ன் பெறுமதி யாது?

1. $1000100_2$ 2. $100100_2$ 3. $1000101_2$ 4. $1010100_2$

40. தரப்பட்ட BCD ன் பெறுமானங்களில் வலிதற்ற பெறுமானம் யாது?

1. $1001_2$ 2. $1111_2$ 3. $0001_2$ 4. $0111_2$

**( 1 x 40 = 40 Marks)**



Education கல்வி අධ්‍යාපන
kalvi.lk

## பகுதி – II

**முதலாம் வினா உட்பட வேறு நான்கு வினாக்களும் உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

01. மாற்றமடையும் தகவல் தொழினுட்ப உலகில் கணினியின் பங்களிப்பானது இன்றியமையாததாக மாற்றமடைந்துள்ளது.

1. தகவல் தொழினுட்ப உலகில் செய்தித்தாள்களிலும் சஞ்சிகைகளிலும் பயன்படுத்தப்படும் குறிமுறை எது?
2. எந்த நேரத்திலும், எந்த இடத்திலும் கல்வியைப் பெற்றுக்கொள்வதற்கு இலங்கையில் உருவாக்கப்பட்ட வலைத்தளங்கள் 2 தருக.
3. விவசாயத்துறையில் பயன்படுத்தப்படும் தகவல் தொடர்பாடல் தொழினுட்பக் கருவிகள் நான்கினைக் குறிப்பிடுக.
4. இலங்கையில் இணைய சேவையினை வழங்கும் நிறுவனங்கள் இரண்டினைத் தருக.
5. சமூகத் தொடர்பாடலுக்குப் பயன்படும் சமூக வலைத்தளங்கள் 2 தருக?
6. தரப்பட்டதை வாசிக்க உதவும் கருவி எது?
7. இருவாயியைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட வெளியீட்டுக்கருவி எது?
8. கணினித் தொகுதி மூலம் வெளியிடப்பட்ட தகவல்களின் வடிவங்கள் எவை?
9. பின்வரும் சாதனங்களை தரவுக் கொள்வனவு அடிப்படையில் ஏறுவரிசைப்படுத்துக.
   (பதுக்கு நினைவகம் வன்தட்டு காந்தநாடா DVD CD RAM)
10. Unicode ல் பயன்படுத்தும் வரி இயல்புகள் எத்தனை? (2 x 10 = 20 Marks)

02. மனித வாழ்க்கையில் தொடர்பாடலானது மிக முக்கியமானதொன்றாகும். இதற்கு தற்கால நவீன தொழினுட்ப உலகில் உலகளாவிய வலைப்பின்னல் அமைப்பின் பணி உன்னதமானது.

1. வலையமைப்பு என்றால் என்ன?
2. வலையமைப்பை பயன்படுத்துவதனால் கிடைக்கும் 3 அனுகூலம் 2 பிரதிகூலம் குறிப்பிடுக.
3. வலையமைப்பு வகைகள் எவை?
4. வலையமைப்பில் பயன்படும் இடத்தியல் இரண்டை வரைந்து எவ்வகை எனக்குறிப்பிடுக.

(2.5 x 4= 10 Marks)

03. சரியான, திருப்திகரமான முடிவினைப் பெற்றுக்கொள்வதற்கு தரவு, தகவல், தரவுச் செய்முறையின் பயன்பாடு மிக முக்கியமானது.

1. தரவு என்றால் என்ன? 2 உதாரணம் தருக.
2. தகவல் என்றால் என்ன? 2 உதாரணம் தருக.
3. தரவுச் செயன்முறை என்றால் என்ன? 2 உதாரணம் தருக.
4. தகவல் தொடர்பாடலின் பிரயோகம் 6 தருக.

(2.5, 2.5, 2, 3= 10 Marks)



kalvi.lk

04. கணனியானது பல தலைமுறைகளைக் கடந்து வந்துள்ளது. ஒவ்வொரு தலைமுறையிலும் ஒவ்வொருவிதமான தொழினுட்பம், பல விதமான உள்ளீட்டுச் சாதனங்கள், வெளியீட்டுச் சாதனங்கள், சேமிப்புக்கருவிகள் என்பன பயன்படுத்தப்பட்டுவந்தன.

தரப்பட்ட அட்டவணையை பூர்த்தி செய்க.

| தலைமுறை | பிரதான தொழினுட்பம் | பயன்படுத்தும் மென்பொருள் | இயல்பு | உதாரணம் |
|---|---|---|---|---|
| முதலாம் | .............................. | .............................. | .............................. .............................. | .............................. |
| இரண்டாம் | .............................. | .............................. | .............................. .............................. | .............................. |
| மூன்றாம் | .............................. | .............................. | .............................. .............................. | .............................. |
| நான்காம் | .............................. | .............................. | .............................. .............................. | .............................. |

(0.5 x 20 = 10 Marks)

05. கணினியின் தொழிற்பாட்டிற்கு மையமுறைவழி அலகின் பங்களிப்பு இன்றியமையாதது. தரப்பட்ட இடைவெளியில் பொருத்தமான சொல்லை இடுக.

1. கணினிக்குத் தரவுகள் ஆனது ........................................ மூலம் அனுப்பப்படுகின்றது.
2. கணினியின் கணித்தல் செயற்பாட்டுக்கு உதவுவது ........................................ ஆகும்.
3. கணினியின் அனைத்து செயற்பாடுகளையும் கட்டுப்படுத்துவது .............................. ஆகும்.
4. கணினியிலிருந்து தகவல்களைப் பெற உதவுவது .............................. ஆகும்.
5. மையமுறைவழி அலகு தொடர்பான தகவல்களை வைத்திருப்பது ...................................... ஆகும்.
6. CPU ன் கதியானது .................................................. என அழைக்கப்படும்.
7. தறபோக்கு பெறுவழி நினைவகத்தின் கொள்திறனானது ............................................ ஆகும்.
8. மிகவும் வேகம் கூடிய நினைவகம் ................................................ ஆகும்.
9. அடிப்படை உள்ளீடு, வெளியீடு தொகுதி தொடர்பான தகவல்களை வைத்திருப்பது .............................. ஆகும்.
10. புளு றே வட்டின் கொள்ளளவானது .......................................... ஆகும்.

(Bytes, உள்ளீட்டுக்கருவி, வெளியீட்டுக்கருவி, 25GB – 128 GB, பதுக்கு நினைவகம், எண்கணித தர்க்க ரீதியான அலகு, கட்டுப்பாட்டலகு, நினைவகப் பதிவாக்கல், கடிகாரக்கதி, GHZ, GB, ROM, 4.7 GB – 9.4 GB)

( 10 X 1 = 10 Marks)



kalvi.lk

06. எந்தவொரு பெறுமானத்தையும் குறிப்பிடத்தக்க தனித்துவமான குறியீடுகள் அல்லது எண்தொடையே எண்முறைமை எனப்படும். அன்றாட வாழ்வில் இதன் பயன்பாடு இன்றியமையாதது.

1. இரும எண்களை பதின்ம எண்களாக மாற்றுக.
   1. $1100_2$
   2. $11011_2$
2. எண்ம எண்களை தசம எண்களாக மாற்றுக.
   1. $456_8$
   2. $6000_8$
3. பதின்ம எண்களை பதினறும எண்களாக மாற்றுக.
   1. $346_{10}$
   2. $4004_{10}$
4. பதினறும எண்களை பதின்ம எண்களாக மாற்றுக.
   1. $4A_{16}$
   2. $3AB_{16}$
5. பதின்ம எண்களை இரும எண்களாக மாற்றுக.
   1. $1046_{10}$
   2. $99_{10}$

( 10 X 1 = 10 Marks)

Education கல்வி அධ්‍යාපන



kalvi.lk

# GRADE 6-11

## STUDY WITH US..!

# ICT

## ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Google Meet செயலி மூலமாக
இணைய வழியில் நடைபெறும் ICT பாட நிகழ்நிலை வகுப்புகள்.

Conducted by

**Pathmanathan Pathmaraj**

(BIT, B.COM, PGDM, MBA, ACPM, MCP, N+)

**TAMIL MEDIUM**

**ENGLISH MEDIUM**

**MONTHLY**

**600/=**



Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள்
தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

கல்வி

Digital Learning Platform

www.kalvi.lk

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.


**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page